S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி நவம்பர் 14 * 2025 * மலர் -1 * இதழ்-166* VOL-1 * ISSUE-166 விலை ரூ.3 * பக்கம் -4

## சட்டசபை தேர்தல் எதிரொலி:

# ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுடன் ரூ.5 ஆயிரம்!




## நிதித்துறை அதிகாரிகளுடன் தமிழக அரசு ஆலோசனை!!

சென்னை, நவ.14

சட்டசபை தேர்தல் வர இருப்பதையொட்டி இந்தாண்டு பொங்கல் பண்டிகைக்கு, தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ரேஷன் அட்டைதாரருக்கும் 5,000 ரூபாய் வழங்க, தமிழக அரசு நிதித்துறை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழர்களின் அடையாளமாக அனைத்துத் தரப்பு மக்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் பெருமை மிகு ஒரு பண்டிகை பொங்கல் திருநாளாகும். மனித குலத்திற்கே அடித்தளமாய் விளங்கி, உணவளித்து வரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாகவும் தமிழர்களாகிய அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட பொங்கல் பரிசாக 5 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொங்கல் திருநாளைச் சிறப்பாக மக்கள் கொண்டாடிட ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள் வருமான வரி செலுத்துவோர் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிவோர் சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 5,000 ரூபாய் பொங்கல் பரிசாக நியாய விலைக் கடைகளில் பொங்கல் திருநாளுக்கு வழங்கப்படும் என்று தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இந்த நன்னாளை முன்னிட்டு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது. இந்த முறை வெள்ளம் வழங்கப்படுமா என்ற கேள்வி உள்ளது. அதை பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படலாம்.

மேலும், முன்கூட்டியே திட்டமிட்டு உற்பத்தி செய்த காரணத்தினால் பொங்கல்திருநாளைமுன்னிட்டுவழங்கப்படவுள்ள இலவச வேட்டிசேலைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து, இவற்றை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இருப்பினும், மாநிலத்தின் நிதி நிலை காரணமாக அதிகாரிகள் சவால்களை எதிர்கொள்வதாக கூறப்படுகிறது. தமிழகத்தின் நிதி பற்றாக்குறை ஒரு பெரிய கவலையாக உள்ளது. உங்களுடன் ஸ்டாலின்' முகாம்கள் மூலம் இதுவரை 44 லட்சம் பெண்கள் உதவித் தொகைகோரிவிண்ணப்பித்துள்ளனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் இந்த முகாம்களில் பெறப்படும் என முதல்வர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

புதிய விண்ணப்பங்களை ஆய்வு செய்ய வருவாய் துறை அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொண்டு வருவதாக துணை முதல்வர் தெரிவித்தார். நவம்பர் வரை இத்திட்டம் நடைபெறுகிறது. 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அரசுத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால், இரண்டு கோடிக்கும் அதிகமான ரேஷன் அட்டைதாரர்கள் பயனடைவார்கள். இதற்கு சுமார் 10,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பிற துறைகளில் இருந்து நிதியை மாற்றுவது அல்லது தற்காலிக பொருளாதார வழிகளை உருவாக்குவது போன்ற நிதி ஆதாரங்களை அடையாளம் காண விவாதங்கள் நடந்து வருகின்றன. அரசியல் பார்வையாளர்களின் கூற்றுப்படி, இந்த நடவடிக்கை, இறுதி செய்யப்பட்டால், 2026 சட்டமன்றத்தேர்தலுக்குமுன்னதாக ஒரு நலத்திட்டமாகவும், அரசியல் ரீதியாக முக்கிய முடிவாகவும் இருக்கலாம். தி.மு.க. அரசு இந்த திட்டத்தை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை என்றாலும், பண்டிகைக்கு நெருக்கமாக ஒரு அறிவிப்பு வெளியாகலாம் என்று உள்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



கிருஷ்ணகிரி மேற்கு அ.தி.மு.க. மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் மற்றும் ஒசூர் மாநகர கிழக்கு மண்டல குழு தலைவர் புருசோத்தம ரெட்டி, அ.தி.மு.க. ஒசூர் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் நவீன்குமார் ஆகிய இருவரும் அமைச்சர் சக்கரபாணி முன்னிலையிலும், ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.

## பா.ஜ.க., தி.மு.க. தவிர எந்த கட்சி வந்தாலும் கூட்டணிக்கு தயார்!

### த.வெ.க. திடீர் அறிவிப்பால் அ.தி.மு.க. உற்சாகம்!!

சென்னை, நவ.14

பா.ஜ.க., தி.மு.க. தவிர எந்த கட்சி வந்தாலும் கூட்டணிக்கு தயார் என த வெ க திடீரென அறிவித்துள்ளது. இது அதிமுகவுக்கு விடுக்கப்பட்ட மறைமுக அழைப்பா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலை எதிர்கொள்ளத் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தாண்டின் தொடக்கத்தில் இருந்தே ஆயத்தமாகி வருகின்றனர். அதன்படி, திமுக தலைமையிலானகூட்டணியில்காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மதிமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் மீண்டும் கூட்டணியாக இணைந்து சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க உள்ளன.

அதே போல், எதிர்க்கட்சியான அதிமுக, மீண்டும் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட உள்ளது.

இது தவிர மற்ற கட்சியான தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள்யாருடன்கூட்டணி சேரலாம் என்பது குறித்து தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில்தான்நடிகரும், தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான விஜய் புதிதாகக் கட்சி ஆரம்பித்து இந்த தேர்தலில் முதல் முறையாகக் களமிறங்க உள்ளார். இதற்கிடையே அதிமுக பொதுக் கூட்டத்தில் தவெ க கொடியுடன் சிலர் கலந்து கொண்டனர்.அப்போது இங்கேபாருங்கள் கொடி பறக்கிறது என்று எடப்பாடி பழனி சாமி கூறியவுடன் அங்கிருந்தவர்கள் ஆரவாரம் செய்தனர். இந்தப் பேச்சு தமிழக அரசு வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தவெ க பொதுக்குழு கூட்டம் சமீபத்தில் நடந்தது.

இதில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் என மொத்தம் இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஆத்வ் அர்ஜூனா, பொதுச்செ யலாளர் ஆனந்த் ஆகியோர் உரையாற்றினர்.இஸ்லாமியர்களின் உரிமைகமைப் பறிக்கும் வக்பு சட்டத் திருத்த மசோதா ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், சமூக நீதியை நிலைநிறுத்த, சாதிவாரி கணக்கெடுப்புக்கான ஆய்வு நடத்த வேண்டும் உள்ளிட்ட 17 தீர்மானங்கள் இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்தநிலையில் யாருடனும் கூட்டணி இல்லை என விஜய் அறிவித்தார். இது அதிமுக மட்டுமன்றி பாஜக வினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதற்கிடையே த.வெ.க. கொள்கை பரப்பு பொதுச்செயலாளர்அருண்ராஜ்செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

த.வெ.க.தலைவர்விஜயின்சுற்றுப்பயண அறிவிப்பு விரைவில் வெளிவரும்.தலைவர் விஜய்க்கு மக்களுடன் இருக்க வேண்டும் என்ற மன உறுதி அதிகரித்துள்ளது. பா.ஜ.க., தி.மு.க.வை தவிர எந்த கட்சி வந்தாலும்அரவணைப்போம். த.வெ.க. தலைமையை ஏற்று வரக்கூடிய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப்படும். கூட்டணி குறித்த முடிவை விஜய் எடுப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

## பீகாரில் இன்று வாக்கு எண்ணிக்கை; எந்திரங்களுக்கு பலத்த பாதுகாப்பு!

புதுடெல்லி, நவ. 14

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதையொட்டி, மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் மற்றும் வாக்கு ஒப்புகைச் சீட்டு கருவிகள் சீலிடப்பட்டு, பாதுகாப்பறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 46 மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மையங்களின் உள்பகுதியில் மத்திய ஆயுதக் காவல் படையினரும், வெளிப் பகுதியில் காவல் துறையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். 24 மணிநேர சிசிடிவி கண்காணிப்பும் மேற்கொள்ளப்ப ட்டுள்ளது. பாதுகாப்பறையை தினமும் சோதனையிட மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் பேரவைக்கு கடந்த நவ. 6, 11–இல் இரு கட்டங்களாக (121, 122) தேர்தல் நடைபெற்றது. மாநில வரலாற்றில் இல்லாத



அளவில் 67 சதவீத வாக்குகள் பதிவாகின.

பீகாரில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்து க்குப் பின் நடைபெற்றுள்ள இத்தேர்தல், பாஜக, ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ், இடதுசாரிகளின் 'இண்டி' கூட்டணிக்கும் பலப்பரீட்சையாக பார்க்கப்படுகிறது.

மீண்டும் பாஜக கூட்டணி ஆட்சி?: தேர்தலுக்குப் பிந்தைய பெரும்பாலான வாக்குக் கணிப்பு முடிவுகள், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியைத் தக்கவைக்கும் என்று தெரிவித்துள்ளன. மாநிலத்தில் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்று முடிந்ததையொட்டி, பல்வேறு வழிபாட்டுத் தலங்களில் முதல்வர் நிதீஷ் குமார் நேற்று வழிபாடு மேற்கொண்டார்.

மறு வாக்குப் பதிவு கிடையாது: பீகார் முதல்கட்டத் தேர்தலில் எந்த வாக்குச்சாவடியிலும் மறு வாக்குப் பதிவுக்கு பரிந்துரைக்கப்படவில்லை. இதேபோல், கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இரண்டாவதுஇறுதிக்கட்ட தேர்தலிலும் எங்கும் மறு வாக்குப் பதிவுக்கு பரிந்துரைக் கப்படவில்லை என தேர்தல் ஆணையம் நேற்று தெரிவித்தது. வாக்குப் பதிவு ஆவணங்களின் ஆய்வுக்குப் பின், எந்த வாக்குச்சாவடியிலும் குறைபாடுகளோ, முறைகேடுகளோ கண்டறியப்படவில்லை. இதனால், மறு வாக்குப் பதிவுக்கு உத்தரவிட வேண்டிய தேவை எழவில்லை.

பீகாரின் அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் மறு வாக்குப் பதிவு இல்லாத முதல் தேர்தல் இது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் ஒன்றியத்தில் கல்லாகுளம், கோரைக்காடு ,தொட்டி வலசு, பல்லவநாயக்கன்பட்டி ,நெ.3குமாரபாளையம்ஆனந்தகவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் தார் சாலை உள்ளிட்ட பணிகளுக்கு அமைச்சர் மதிவேந்தன், ராஜேஸ்குமார் எம்.பி.ஆகியோர் அடிக்கல் நாட்டினர்

### நிலக்கோட்டை அருகே

## பைக் கவிழ்ந்து என்ஜினீயர் பலி!

### நாய் குறுக்கே பாய்ந்ததால்!!

நிலக்கோட்டை, நவ.14–

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, நீரேத்தான் பகுதியைச் சேர்ந்தவர் கோட்டை சிங்கம் வயது 45. இவர் பெங்களூரில் ஒரு தனியார் நிறுவனத்தில் பொறியாளராக பணியாற்றி வருகிறார். இவருக்கு சொந்தமான தோட்டம் அம்மைய நாயக்கனூர் அருகே உள்ள டோல் கேட் பகுதியில் உள்ளது. அங்கு காலையில் பூக்களைப் பறித்துக் கொண்டு நிலக்கோட்டை பகுதிக்கு பைக்கில் பூக்களை கொண்டு வந்துள்ளார். அம்மையநாயக்கனூரில் இருந்து நிலக்கோட்டையை நோக்கி சிலுக்குவார் பட்டி அருகே உள்ள கோவில் மேடு பகுதியில் வரும்போது அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள கோழிக் கழிவுகளை தின்று கொண்டிருந்த நாய் திடீரென்று சாலையின் குறுக்கே வந்தது. அப்போது கோட்டைச் சிங்கம் நாய் மீது மோதினார். இதில்



தூக்கி வீசப்பட்ட அவர் கோட்டை சிங்கம் தலையில் பலத்த அடிபட்டு ரத்தம் பீறிட்டு சம்பவ இடத்திலேயே இறந்து போனார். அதேபோன்று நாயும் இறந்து போனது. கோட்டை சிங்கம் தற்போது ஐயப்பன் கோயில் செல்வதற்கு மாலை அணிந்து இருந்தார். இதுகுறித்து தகவல் இருந்த நிலக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர்சத்ய பிரபாதலைமையில் போலீசார் சென்று கோட்டை சிங்கத்தின் உடலை மீட்டு நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.



உடுமலை–மூணாறு சாலை புங்கன் ஓடைப்பகுதி மரங்களும், செடிகளும் நிறைந்து கண்ணுக்கு குளுமையாக காட்சியளிக்கிறது. அங்கு இரை தேடிய புள்ளிமான் கூட்டத்தை படத்தில் காணலாம்.



ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு போதைபொருளின் தீமை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

### ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில்

## பெண் குழந்தைகள் பாதுகாப்பு போதை பொருளின் தீமை குறித்து விழிப்புணர்வு!

திருவெண்ணெய்நல்லூர். நவ.14

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில்

பெண் குழந்தைகள் பாதுகாப்பு போதைபொருள் குறித்து மாணவ மாணவிகளிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன் கொண்டு பெண் குழந்தைகளுக்கும் பாலியல் ரீதியாக ஏற்படும் குற்ற நடவடிக்கைகளை தடுப்பது, படிப்பை பாதியில் நிறுத்திய குழந்தைகள் மீண்டும் படிப்பை தொடர்வது, குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பது, பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்து எடுத்து கூறினார். மேலும் குற்ற நடவடிக்கைகளுக்கு குழந்தைகள் சேவை எண்1098, காவல் துறை எண்100, பெண்கள் உதவி எண்181 ஆகிய இலவச எண்களை தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என இவ்வாறு கூறினார். அப்போது பள்ளி தலைமைஆசிரியர்மற்றும்ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## டைசன் நிறுவனம், காற்றைச் சுத்திகரிக்கும் ஹீட்டர் அம்சத்துடன் கூடிய 2 புதிய பியூரிஃபையர்!

சென்னை, நவ.14

டைசன் நிறுவனம் தனது புகழ்பெற்ற ஹாட் + கூல் பியூரிஃபையர் வரிசையில் புதிய இரண்டு மாடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது – டைசன் பியூரிஃபையர் ஹாட்+கூல் HP2 DeNOx மற்றும் டைசன் பியூரிஃபையர் ஹாட்+கூல் HP1. இவை சுத்தமான காற்றை வழங்குவதுடன், வருடம் முழுவதும் வெப்பமூட்டுதல் மற்றும் குளிரூட்டுதல் வசதியையும் தருகின்றன. இந்தியாவில் அதிகரித்து வரும் NO, VOCs, PM2.5 மற்றும் PM10 போன்ற மாசுக்களை எதிர்கொள்வதற்காக, டைசன் இதுவரை அறிமுகப்படுத்தியதில் மிக மேம்பட்ட கேஸ்கேப்சர் சிஸ்டம் இதிலுள்ளது. இந்த பியூரிஃபையர்ஸ் இரண்டும் உணர்ந்து செயலாற்றும் சென்சார்கள் கொண்டவை.

இவை தூசி, அலர்ஜன்ஸ் மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைடு போன்ற மாசுக் கூறுகளை தானாகவே கண்டறிந்து, காற்றின் தரத்தின்படி சுத்திகரிப்பு வேகத்தை மாற்றுகின்றன. பயனர்



கள் காற்றின் தரத்தை LCD டிஸ்பிளே அல்லது MyDyson™ ஆப் மூலம் கண்காணிக்கலாம்.

HP1 மாடல் HEPA H13 மற்றும் ஆக்டிவேட்டட் கார்பன் ஃபில்டர் கொண்டது, ஆனால் HP2 DeNOx மாடலில் கூடுதலாக Kகார்பன் ஃபில்டர் இடம் பெற்றுள்ளது – இது வழக்கமான கார்பனுடன் ஒப்பிடும்போது50%அதிகமான NOவாயுவைப் பிடிக்கிறது மற்றும் ஃபார்மால்டிஹைடையும் அழிக்கிறது.

இவை இரண்டும் டைசன் ஏர் மல்டிப்ளையர்™ தொழில்நுட்பத்தின் மூலம் அறை முழுவதும் சுத்தமான காற்றை 350° ஆஸிலேஷனுடன் பரப்புகின்றன. குளிர் காலங்களில் தானாகவே வெப்பநிலையை பராமரிக்கவும், வெப்பமான நாட்களில் குளிர்ச்சியையும் வழங்கவும் இவை உதவுகின்றன. மேலும், அமேசான் அலெக்ஸா, கூகிள் அசிஸ்டென்ட், சிரி போன்ற வாய்ஸ் கட்டுப்பாட்டுடன் இணக்கமானவை. HP2 DeNOx (விலை ₹68,900) வெள்ளை/கோல்டு மற்றும் நிக்கல்/கோல்டு நிறங்களில், HP1 (விலை ₹56,900) வெள்ளை/சில்வர் மற்றும் நிக்கல்/சில்வர் நிறங்களில் கிடைக்கின்றன. இவை Dyson.in மற்றும் இந்தியா முழுவதும் உள்ள டைசன் கடைகளில் கிடைக்கின்றன.



வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 40, சூரிய குளம் மசூதி தெருவில் ரூ.69 இலட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணி தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர்வே. இரா.சுப்புலெட்சுமி, ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையாளர் இரா. லெட்சுமணன், மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் அரசு உட்பட பலர் உடனிருந்தனர்.



கரூர் மாவட்டம் குளித்தலை ஊராட்சி ஒன்றியம் ராஜேந்திரம் ஊராட்சி கல்லுப்பட்டியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

## காஞ்சிபுரம் காரணிமண்டபம் மேல்பாக்கம் வழியாக புதிய பேருந்து வழித்தடம்!

### எம்.ஏல்.எ. சுந்தர் துவக்கி வைத்தார்!!

காஞ்சிபுரம்,நவ.14

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மேல்பாக்கம் ஊராட்சியில் காஞ்சிபுரம் பார்லி மண்டபம் மேல்பாக்கம் வழியாக புதிய பேருந்து வழித்தடம் கரன் ஒன்றிய குழு பெருந் தலைவர் ஹேமலதா ஞானசேகரன் பேரூர் செயலாளர் பாரிவள்ளல் பேரூராட்சி மன்ற சசிகுமார் மாவட்ட கவுன்சிலர் பத்மா பாபு ஒன்றிய கவுன்சிலர் ருத்ரகோடி ஊராட்சி



ஜி 34 கி புதிய பேருந்து சேவையை எம்எல்ஏ சுந்தர் துவக்கி வைத்தார் காரணி மண்டபத்தில் இருந்து மேல்பாக்கம் வழியாக இளநகர் பெருநகர் மாங்கால் கூட்ரோடு காஞ்சிபுரம் சென்றடைகிறது பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கைய இருந்து வந்த பேருந்து சேவையை எம்எல்ஏசுந்தர்நிறைவேற்றினார் அதைத்தொடர்ந்து பொது மக்களுக்கு அன்ன தானமும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர ஞானசே மன்ற தலைவர் அஞ்சலை சம்பத் துனன மேலாளர் வணிகம் ஸ்ரீதர் மேலாளர் இளம்பரிதி. கிளை.மேலாளர் நாராயணன். ஆனுந்த மண்டலம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா ஆனந்தன். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆதிநாராயணன் பெருநகர் தமிழ்ச்செல்வன் அனுமந்தண்டலம் ஹரிதாஸ் மானாமதி கண்டிகை தாமஸ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

## சென்டர்மீடியனில் பால் வேன் மோதி டிரைவர் பலி!

நத்தம், நவ, 14

திண்டுக்கல் மாவட்டம் தோட்டனூத்து ஊராட்சி மாலைப்பட்டியை சேர்ந்தவர் ஜார்ஜ்பெர்னாண்டஸ் (42) தனியார் பால் வண்டி டிரைவராக உள்ளார்.இவர் நேற்று அதிகாலை மினிவேனில் பால் பாக்கெட்டுகளை ஏற்றிகொண்டுமதுரைமாவட்டம்சேக்கிபட்டிபகுதியில் இறக்கி விட்டு மீண்டும் திண்டுக்கல்லுக்கு திரும்பி கொண்டிருந்தார்.நத்தம்அருகேஅப்பாஸ்புரம்பகுதியில் வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையின் நடுவே இருந்த செண்டர்மீடியனில் மோதியது. இதில் பலத்த காயமடைந்த ஜார்ஜ்பெர்னாண்டஸ் வேனின் உள்ளே இடிபாடுகளுக்குள் சிக்கி பரிதாபமாக சம்பவ இடத்திலயே உயிரிழந்தார். தொடர்ந்து 1 மணி நேர போராட்டத்திற்கு பிறகு இடிபாடுகளில் சிக்கிய டிரைவர் உடல் தீயணைப்பு துறையினர் மூலம் மீட்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் இறந்து போன ஜார்ஜ்பெர்னாண்டஸ்ற்கு ஜனோவா என்ற மனைவியும், மூன்று பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளது குறிப்பிடதக்கது



திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி வளாகம் பேருந்து நிலையம் அருகே சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை சார்பாக பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு தெருக்கூத்து கலைஞர்களை கொண்டு குழந்தை திருமணம் தடுத்தல் (ம) குழந்தை களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நாடகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மு பிரதாப் துவக்கி வைத்து பொதுமக்களுடன் பார்வை யிட்டார் உடன் மாவட்ட சமூக நல அலுவலர் சொ வனிதா கண்காணிப் பாளர் பார்த்திபன் பாதுகாப்பு அலுவலர் மலர்விழி உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சிக்கு தேவையான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை ஐ ஆர்சிடிஎஸ் தொண்டு நிறுவனம் சார்பில் அதன் நிர்வாக இயக்குனர் ஸ்டீபன் ஒருங்கிணைப்பாளர் பழனி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



### ராணிப்பேட்டையில்

## மணல் குவாரி அமைக்க வேண்டும் டிப்பர் லாரி உரிமையாளர்கள் கலெக்டரிடம் மனு!

இராணிப்பேட்டை நவ.14

ஆற்காடு அடுத்த சக்கரமல்லூரில் உள்ள பாலாற்றில் மணல் குவாரி விரைவில் தொடங்க வேண்டுமென டிப்பர் லாரி உரிமையாளர்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர். ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த சக்கரமல்லூரில் மணல் குவாரி அமைப்பது தொடர்பான தமிழக நீர் வளம் மற்றும் ஆதாரத் துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழ்நாடு டிப்பர் லாரி உரிமையாளர் சங்கத்தினர் நேற்று ராணிப்பேட்டை கலெக்டர்சந்திரகலாவை நேரில் சந்தித்து கோரி விரைவில் திறக்க அனுமதிக்க வேண்டிய விரைவில் தெரிவிக்க கோரி மனு அளித்தனர். அப்போது சங்க தலைவர் காஞ்சி. தீனன் செய்தியாளர்களை சந்தித்தபோதுதமிழக அரசு நீர்வண ஆதாரத் துறை மூலமாக தமிழகம் முழுவதும் 9 மணல் குவாரிகள் திறப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் ஆகையால் ராணிப்பேட்டை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த சக்கரமல்லூர் பகுதி மணல் குவாரி உடனடியாக மாவட்ட ஆட்சியரிடம் தொடர்ந்து எம்சாண்டு களை, ஊக்குவிக்குவதற்காக பல நபர்கள் சமூக ஆர்வலர்கள் என்ற பெயரில் மணலுக்கு எதிராக பல்வேறு கருத்துக் களை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள் குறிப்பாக இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய பல மலைகள் காலடிக்கப்பட்டு இருக்கிறது.தமிழ் கடவுள் முருகன் வீடுகளாகவும் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது .எனவே உடனடியாக தரமாக இருக்கக்கூடிய ஆற்று மணலை குவாரி அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி அளித்து தரமான கட்டிடங்கள் தமிழக முழுவதும் உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதே போல எம்சான்டு தயாரிப் பதற்கான ரசாயனங்கள் அதிகமாக இருக்கிறது. அதேபோல் அவர்கள் பயன் படுத்தக் கூடிய அந்த நீர் டிடிஎஸ் என்று சொல்லக்கூடிய அந்த டிடிஎஸ் செலவு அதிகமாக இருப்பதை நேரடியாக செயல் முறை விளக்கத்தில் நேற்றைய பத்திரிகையாளர் மன்றத்திலும் மாவட்ட ஆட்சியர் சந்திப்பிலும் நாங்கள் நேரடியாக விளக்கி இருக்கிறோம். எனவே தொடர்ந்து எம்சா ண்ட் மூலமாக வீடுகள் கட்டுவ தால் தரமற்ற கட்டிடங்கள் தமிழ்நாட்டில் உருவாகிக் கொண்டு வருகிறது ஏறக் குறைய 10 ஆண்டுகளில் மிகப் பெரிய பேரிடரை கட்டிடங்கள் ஈடுபாடு மூலமாக தமிழகம் சந்திக்க நேரிடும் என்பதை இந்த நேரத்திலே மாவட்ட ஆட்சியர் இடத்திலே விளக்கி சொல்லி இருக்கிறோம் உடனடி யாக ஆவணம் செய்வதாக மாவட்ட ஆட்சியர் சொல்லி இருக்கிறார்கள் என்று கூறினார். தில் இதில் தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர் சங்கங்களில் நிர்வாகிகளுடன் இருந்தனர்.



## கமுதி மேற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட பூத்களில் ஆலோசனை கூட்டம்!

கமுதி நவ.14

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆணைக்கிணங்க இராமநாதபுரம் மாவட்ட கழக ஆற்றல்மிக்க செயலாளர் செயல் வீரர் எம். ஏ. முனியசாமி ஆலோசனைப்படி கமுதி மேற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட பூத்களில் பிஎல் ஏ 2 மற்றும் கிளை கழக செயலாளர்கள் பூத் கமிட்டி செயலாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக நெல்லையிலிருந்து வருகை தந்து இருக்கிற கழக அமைப்புச் செயலாளர் சுதா பரமசிவம்கழக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் முன்னாள் மாவட்ட சேர்மன் . எம். சுந்தரபாண்டியன் கழக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மலேசியா பாண்டி கமுதி வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் ஆர். இராஜேந்திரன் கமுதி மேற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் டி. சேகரன் கமுதி வடக்கு ஒன்றிய கழக அவை தலைவர். ஏ. ஆர். இராமச்சந்திரன்மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் வி. கோவிந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வல்லக்கோட்டை முருகன் கோயிலில் 5000 பனை விதைகள் நடப்பட்டது!

ஸ்ரீபெரும்புத்தூர்,நவ.14

தமிழகம் முழுதும் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் 20 இல ட்சம் மரக் கன்றுகள் நடப்படும் என்று சட்டசபையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதன் படி தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திலும் தலா ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் உத்தரவிட்டார்.

அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் அடுத்த வல்லக்கோட்டையில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச்சொந்தமான இடத்தில் செவ்வாயன்று 5000 பனை விதைகள் நடப்பட்டன. காஞ்சிபுரம் இணை ஆணையர் திரு.சி.குமரதுரை, உதவி ஆணையர் திரு.ஆர். கார்த்திகேயன் ஆகியோரது அறிவுரைப்படி, திருக்கோயிலுக்குப் பின்புறமுள்ள ஐந்து ஏக்கர் நிலத்தில் பனைவிதைகள் நடப்பட்டன. விதைகள் அமைப்பு இயக்கம் மற்றும் வாலாஜாபாத் ஐடிஐ 100 மாணவர்கள் திருக்கோயில் நிர்வாகத்துடன் இணைந்து பனைவிதைகளை நட்டனர். இந்த நிகழ்ச்சியில் திருக்



கோயில் நிர்வாக அதிகாரி சோ.செந்தில்குமார், அறங்காவலர் குழு தலைவர் ஜா.செந்தில்தேவ்ராஜ், அறங்காவலர் த.விஜயகுமார், முன்னாள் அறங்காவலர் புண்ணியநாதன், விதைகள் அமைப்பு நிர்வாகி சரவணன், திருப்பெரும்புதூர் காங்கிரஸ் முன்னாள் வட்டார தலைவர் முருகேசன் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திண்டிவனத்தில்மௌலானா ஆபுல்கலாம் ஆசாத் நினைவு நாளை முன்னிட்டு மாணவர்களுக்கு முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் ச.சு.ஜைனுதீன் சீருடைகள் வழங்கினார்.

# பிறந்த நாளை இந்தியாவில் தேசிய கல்வி நாளாக அனுசரிக்கப்படுகிறது!

## மதரஸா மாணவர்களுக்கு சீருடை வழங்கினார்!!

திண்டிவனம், நவ.14

இந்திய விடுதலை இயக்கத்தின் மூத்த அரசியல் தலைவரும். இந்திய முஸ்லிம் அறிஞரும், இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவருடைய நினைவு நாளான நவம்பர் 11ம் தேதியை ஒவ்வொரு ஆண்டும் தேசிய கல்வி நாளாக அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு முஸ்லிம் மக்கள் கழகத்தின் சார்பில் திண்டிவனம் அல்மதரஸத்துல் தாருஸ்ஸலாம் மதரஸா மாணவர்களுக்கு சீருடை வழங்கும் விழா விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மஸ்ஜிதே தாருஸ்ஸலாம் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு கிராத் ஓதியவர் இமாம் மஸ்ஜிதே தாருஸ்ஸலாம் பள்ளிவாசல் மௌலானா மௌலவி முஹம்மத் ஹாரூன், மௌலானா மௌலவி கம்பம் எஸ். சுல்தான்இப்ராஹிம்தலைமையில், ஹாஜி அப்துல் காதர் வரவேற்புரையில்

மஸ்ஜிதே தாருஸ்ஸலாம் பள்ளிவாசல் செயலாளர் ஹாஜி எம். அப்துல் வஹாப், 27வது வார்டு நகர மன்ற உறுப்பினர் புது பள்ளிவாசல் செயலாளர் கு. ஷபியுல்லா, புது பள்ளிவாசல் பொருளாளர் ஹாஜி அப்துல் வஹாப், புது பள்ளிவாசல் தலைவர் ஜ. அஹமத் பாஷா, மௌலானா பா. பாஷித் அலி, எஸ். எம். நாசர் அலி, ஜை. முஹம்மத் யூசுப் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிக்ழச்சியில் முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் முனைவர் ச.சு. ஜைனுதீன் மதரஸா மாணவர்களுக்கு மதரஸா சீருடை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்கள் மௌலானா மௌலவி ஏ. நியாஸ் அஹமத், நவாப் பள்ளிவாசல் இமாம், மௌலானா மௌலவி ஹ. முஹம்மத் ஜாவிது இமாம் மஸ்ஜிதே ரஹ்மானியா பள்ளிவாசல், பா. அலாவுதீன் முஸ்லிம் மக்கள் கழகம் மு.மஸ்தான், ர.அப்துல்லா. அ. சாதிக் பாஷா, நூ. சர்தார், அ. முஹம்மத் ஜாபர் ஆகியோர் பங்கேற்றார்கள். நிகழ்ச்சி முடிவில் இறுதியில் முஸ்லிம் மக்கள் கழகத்தின் நகர செயலாளர் மு. அப்துல் ஹக்கீம் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் முஸ்லிம் மக்கள் கழக நிறுவனர் தலைவர் ஜைனுதீன் பேசுகையில்,

மௌலானா அபுல் கலாம் ஆசாத் (ரஹ்) இந்திய விடுதலை இயக்கத்தின் மூத்த அரசியல் தலைவரும், இந்திய முஸ்லிம் அறிஞரும் ஆவார்.

இவர் பரவலாக மௌலானா ஆசாத் என அழைக்கப்படுகிறார். ஆசாத் (விடுதலை) என்பது இவரே வைத்துக் கொண்ட புனைபெயராகும். தேசிய கல்வி நாள்நவம்பர்மாதம் 11ம் தேதி ஆண்டுதோறும் இந்தியா முழுவதும் கொண்டாப்படுகிறதுமேலும் நமது இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக பணியாற்றிய பெருமையை அடைந்தவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத்.

மேலும் ஆரம்பக்கல்வி அனைவருக்கும் இலவச கல்வி கிடைப்பதை முயற்சி செய்தவர். அவர் ஒரு கல்வியாளரும் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார். அவரது போராட்டத்தின் பங்களிப்பை நினைவுக்கூறும் வகையில் அவரது பிறந்த நாளை இந்தியாவில் தேசிய கல்வி தினமாக கொண்டாப்படுகிறதுமேலும் இவரை பின்தொடர்ந்து வருங்காலத்தில் வரும் இளைஞர்களும், இளைஞிகளும் கல்விக்காக போராடவேண்டும் என்று முஸ்லிம் மக்கள் கழகம் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்று கூறினார்.

வாணியம்பாடி அருகே

# கடத்த முயன்ற காருடன் 1 டன் ரேஷன் அரிசி பறிமுதல்; ஒருவர் கைது!



வாணியம்பாடி, நவ.14

திருப்பத்தூர்மாவட்டம் வாணியம்பாடி அடுத்த மாதகடப்பா மலைச் சாலையில் உணவு பாதுகாப்புத்துறை உதவி ஆய்வாளர் அன்சாரி தலைமையில் அதிகாரிகள் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஆம்பூரில் இருந்து ஆந்திரா மாநிலத்தை நோக்கி வந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்ட போது அதில் சுமார் 1 டன் ரேஷன் அரிசி இருப்பதை கண்டு பிடித்தனர். இதனை தொடர்ந்து காருடன் ஒரு டன் அரசி பறிமுதல் செய்து ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்ட மதனஞ்சேரி பகுதியை சேர்ந்த ராஜலிங்கம் (55) என்பவர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாலையில் திடீரென விழுந்த 10 டன் எடை கொண்ட இரும்பு!



திருவெண்ணெய்நல்லூர், நவ.14

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள அரசூர் கூட்ரோட்டில் கிரேனில் பொருத்துவதற்காக ஏற்றிச்சென்ற 10டன் எடை கொண்ட இரும்பு லாரியிலிருந்து திடீரென சாலையில் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. தூத்துக்குடியில் இருந்து மதுராந்தகம் கிரேன் தயாரிக்கும் கம்பெனிக்கு கிரேனில் பொருத்தும் பாகங்களை ஏற்றிக் கொண்டு திருச்சி சென்னை மார்க்கத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது அரசூர் கூட்ரோட்டில் வரும் லாரியில் கட்டி வைத்திருந்த ரோப் அறுந்து லாரியிலிருந்து 10 டன் எடை கொண்ட கிரேனின் உதிரி பாகம் இரும்பு விழுந்தது. அந்த நேரத்தில் லாரியின் பின்னால் தூரத்தில் வாகனம் வந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



புதுக்கோட்டை தைலாநகர் அரசுப் பள்ளியில்

# திறன்மிகு வகுப்பறையை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, நவ.14

புதுக்கோட்டை தைலாநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் திறன்மிகு வகுப்பறையை புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கண்முகம் திறந்து வைத்தார்.

பின்னர் முதன்மைக் கல்வி அலுவலர் சண்முகம் கூறுகையி ல் திறன்மிகு வகுப்பறையை உருவாக்குவதற்கு உதவியதனியார் பேக்கரி நிறுவனத்திற்கும், பள்ளியில் பணியாற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்தார்.

மாணவர்கள் திறன்மிகு வகுப்பறையை நன்கு பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் என்றார்.விழாவிற் கு பள்ளி மேலாண்மை குழுத்தலைவர்அறிவலை தலைமை வகித்தார்.

பள்ளியின்தலைமையாசிரியர் உஷாராணி வரவேற்புரை யாற்றினார். விழாவில் மாவட்ட தொடக்கக்கல் அலுவலர் ரா ஜு கலந்து கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்த ஆசிரியர்களையும் பாராட்டினார்.

விழாவில் வட்டாரக் கல்வி அலுவலர் இராமதிலகம், சுற்றுச் சூழல் அலுவலர் சாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர் மாரிமுத்து, பள்ளி மேலாண்மைக் குழுவைச் சேர்ந்த அழகு சுந்தரம், கஜேந்திரன் மற்றும் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் லதா, சம்பூர்ணம், மகேஸ்வரி ஜெயகலா, மை திலி, ஞானாம்பாள், தேவதாஸ், ஆசிரியர்பயிற்றுநர் ஹேமா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



வாணியம்பாடியில் 1903 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாலாறு பெரு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 200 பேருக்கு 122 ஆம் ஆண்டு நினைவு தினம். மாவட்ட ஆட்சியர் க.சிவ சௌந்திரவல்லி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

# வாணியம்பாடியில் 122 ஆம் ஆண்டு நினைவு தினம்!

## மாவட்ட ஆட்சியர் மலர் தூவி அஞ்சலி!!

வாணியம்பாடி நவ.14

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடிபுதிதாககட்டப்பட்டநினைவு தூணை நகரமன்ற தலைவர் உமாபாய் சிவாஜி கணேசன் திறந்து வைத்து, மலர்தூவி அஞ்சலி, செலுத்தினார்.

பாலாறு பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணியில் அதிமுக எம். எல். ஏ செந்தில் குமார்,

பாலாறு பாதுகாப்பு கூட்டியக்கம் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட அமைப்புகள் கலந்து கொண்டன.

இந்த நிகழ்வில் திமுக செயலாளர் வி.எஸ்.சாரதி குமார், மதிமுக நகர செயலாளர் நாசீர்கான் பாலாறு அம்பலூர் அசோகன்.ன, பாலாறு பாதுகாப்பு கூட்டு இயக்கம் ஒருங்கிணைப்பாளர் வடிவேல் சுப்பிரமணியம், இயற்கை ஆர்வலர் சேதுராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



போச்சம்பள்ளி அருகே உள்ள மல்லிக்கல் கிராமத்தில் கடந்த ஆறு மாதங்களாக தார் சாலை அமைக்க வில்லை என்று கிராம மக்கள் சாலை மறியல்

போச்சம்பள்ளி அருகே

# தார் சாலை அமைக்க வில்லை; கிராம மக்கள் சாலை மறியல்!

கிருஷ்ணகிரி, நவ.14

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள மல்லிக்கல் கிராமத்தில் கடந்த ஆறு மாதங்களாக தார் சாலைஅமைக்கவில்லை என்று கிராம மக்கள் சாலை மறியல்.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே விளங்காமுடி ஊராட்சிக்கு உட்பட்ட மல்லிக்கல் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்களுக்கு மேலும் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் அந்த பகுதியில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக வீரமலை கூட்ரோடில் இருந்து மல்லிக்கல் கிராமத்திற்கு சுமார் 2 கிலோ மீட்டர் தார் சாலை அமைக்க ஜல்லிகற்கள் சாலையில் கொண்டிய நாள் முதல் இதுநாள் வரை தார் சாலை போடவில்லை என்று பல முறை அதிகாரிகள், மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்க வில்லை என்று இன்று போச்சம்பள்ளியில் இருந்து காரிமங்கலம் செல்லும் சாலையில் வீரமலை மல்லிக்கல் கூட்ரோடில் கிராம மக்கள் 200க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து தகவல் அறிந்து வந்த நாகரசம்பட்டி இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ணன் மற்றும் போலீசார் பொதுமக்களிடம் சமாதானம் பேசினர் ஆனால் அவர்கள் சமாதானத்தை ஏற்க மறுத்து சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்தியில் எங்கள் ஐயா மோடி தான் இருக்கிறார்:

# சாட்சியாபுரம் மேம்பாலத்துக்கு விதை போட்டது அதிமுக ஆட்சிதான்!

## முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி!!

சிவகாசி,நவ.14

விருதுநகர் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில், சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதி கழகங்களின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான (BLA2) ஆலோசனைக் கூட்டம் சிவகாசி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அதிமுக முன்னாள் அமைச்சரும், விருதுநகர் மேற்கு மாவட்ட செயலாளருமான ராஜேந்திர பாலாஜி கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "சமீபத்தில் திறக்கப்பட்ட சிவகாசி சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம் உள்ளிட்ட விருதுநகர் மாவட்டத்தின் மூன்று மேம்பாலங்களுக்கு முதற்கட்டமாக 67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது அதிமுக ஆட்சியில் தான்.

இதற்கான செய்தி அப்போது பத்திரிகைகளில் வெளிவந்தது," எனக் கூறினார். மேலும், "சிவகாசி மேம்பாலத்திற்கான மத்திய அரசின் அனுமதி கூட அதிமுக ஆட்சியில்தான் பெறப்பட்டது.

மாணிக்கம் தாகூர் எம்பி கூறுவதுபோலதிமுகவால் மத்திய அரசிடம் இருந்து அனுமதி வாங்க முடியாது.

ஏனெனில், மத்தியில் ஆட்சியில் இருப்பது உங்கள் ஐயா இல்லை – எங்கள் ஐயா மோடி தான்! எங்கள்டாடிதான்இருக்கிறார்! ஆட்டுக்கு தாடி தேவையில்லையென்றால், நாட்டுக்கும் காங்கிரஸ் தேவையில்லை! அதிமுகவின் கடை கோடி தொண்டன் இருக்கும் வரை, திமுகவின் ஏமாற்று நாடகம் எடுபடாது," என ராஜேந்திர பாலாஜி வலியுறுத்தினார். தொடர்ந்து, "திமுகவால் ஒரு புதிய பாலத்திற்கான அனுமதி கூட வாங்க முடியாது; டெல்லிக்கு போவதற்கே அவர்கள் தயங்குகிறார்கள்.

தென் மாவட்டங்களை திமுக அரசு புறக்கணிக்கிறது. தென் மாவட்ட மக்களுக்கான எந்த நிதியும் திமுக அரசு ஒதுக்குவதில்லை. எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில்தான் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள்கொண்டு வரப்பட்டன," எனவும் தெரிவித்தார்.

SNAP 2025 தேர்வுக்கான பதிவு நவம்பர் 20ஆம் தேதி முடிவு:

# சிம்பயாசிஸ் எம்பிஏ படிப்புகளுக்கான இறுதி வாய்ப்பு!

சென்னை,நவ.14

சிம்பயாசிஸ் இன்டர்நேஷனல் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) தனது சிம்பயாசிஸ் நேஷனல் ஆப்டிட்யூட் (SNAP)




டெஸ்ட் 2025 தேர்விற்கான பதிவை நவம்பர் 20, 2025 அன்று முடிவுக்குக் கொண்டுவருகிறது. MBA படிப்புகளுக்கான இந்த தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுக்கான பதிவுத் தேதியில்மேலும்நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது. கணினி அடிப்படையிலான இந்த தேர்வு டிசம்பர் 6, 14 மற்றும் 20, 2025 தேதிகளில் இந்தியாவின் 79 நகரங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் மூன்று முறை வரை தேர்வை எழுதலாம்; சிறந்த மதிப்பெண் சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படும். முடிவுகள் ஜனவரி 9, 2026 அன்று அறிவிக்கப்படும்.

தேர்வு கேள்விகள் அப்ஜெக்டிவ் வகையில் இருக்கும்; ஒவ்வொரு தவறான பதிலுக்கும் 25% எதிர்மறை மதிப்பெண் வழங்கப்படும். ஒரு முயற்சிக்கு ரூ.2,250 பதிவுக் கட்டணமும், ஒவ்வொரு MBA பிரிவிற்கும் ரூ.1,000 கூடுதல் கட்டணமும் வசூலிக்கப்படும். இறுதி தேர்வு செயல்முறை SNAP மதிப்பெண் (50), குழு பயிற்சி (10), மற்றும் தனிநபர் உரையாடல் (40) என மொத்தம் 100 மதிப்பெண்களின் அடிப்படையில் நடைபெறும். தகுதியான விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்தில் 50% (SC/ST க்கு 45%) குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

"SNAP என்பது சிம்பயாசிஸ் MBA படிப்புகளுக்கான நுழைவாயிலாகும். பதிவுத் தேதியுடன் கூடிய இறுதி வாய்ப்பை தவறவிடாதீர்கள்; தங்கள் விண்ணப்பங்களை விரைவாக பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்," என்று டாக்டர் ராமகிருஷ்ணன் ராமன், துணைவேந்தர், சிம்பயாசிஸ் இன்டர்நேஷனல் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) தெரிவித்துள்ளார். NAAC A++ தர அங்கீகாரம் பெற்ற சிம்பயாசிஸ், NIRF 2025 பட்டியலில் இந்திய பல்கலைக் கழகங்களில் 24வது இடத்தையும், QS 2026 ஆசியா தரவரிசையில் 200 வது இடத்தையும் பிடித்துள்ளது. மேலும் விவரங்களுக்குமற்றும்பதிவுக்காக அதிகாரப்பூர்வ இணையதளமான www.snaptest.org ஐப் பார்வையிடவும்.

# அண்ணாமலை பல்கலை. புதிய பதிவாளர் பேராசிரியர் இரா.சிங்காரவேல் பொறுப்பேற்பு!

சிதம்பரம், நவ 14

அண்ணாமலைப்பல்கலைக் கழக புதிய பதிவாளராக பேராசிரியர் இரா. சிங்காரவேல் பதவிஏற்றுக்கொண்டார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு இளங்கலை பட்டமும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவையில் மண்ணியல் மற்றும் வேதியல் துறையில் 1997ஆம் ஆண்டுமுனைவர்பட்டமும், ஆஸ்திரேலியாவில் உள்ள முர்டாக் பல்கலைக்கழகத்தில் 2010ல்பிந்தைய முனைவர்பட்டமும் பெற்றார்.

இவர் சுமார் 31 ஆண்டு காலம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மண்ணியல் மற்றும்வேளாண் துறையில் பேராசிரியராகவும், பதிவாள ராகவும், இணைத் தேர்வுக் கட்டுப்பாட்டுஅதிகாரி யாகவும்,

தொலைதூரக் கல்வி இயக்கக இயக்குன ராகவும், ஆகவும் பணியாற்றியுள்ளார். 150 ஆராய்ச்சி கட்டுரை களை தேசிய மற்றும்சர்வதேச அளவில்

அறிவியல் மாநாடுகளில் சமர்ப் பித்து ள்ளார். புதிய பதிவாளர் சிங்காரவேலுவை பேராசிரியர்கள், சிதம்பரம் நகர முக்கிய பிரமுகர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் செய்தியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



திருவெண்ணெய்நல்லூர் அருகே

# டி.கொணலவாடி கிராமத்தில் குரங்கு கடித்து 5பேர் காயம்!

திருவெண்ணெய்நல்லூர், நவ.14

திருவெண்ணெய்நல்லூர் அருகேஉள்ள டி.கொணலவாடி கிராமத்தை சேர்ந்த சுமதி, பாஸ்கரன், மாலதி, ஏழுமலை, மணிகண்டன் ஆகியோரின் ஆகியோரின் வீட்டில் குரங்குகள் புகுந்து உளுந்து மற்றும் உணவு பொருட்களைதின்று அட்டகாசம் செய்து கொண்டிருந்தது. குரங்கை விரட்டும் போது இவர்கள் இருவரையும் கடித்து விட்டு சென்று விட்டது. இவர்கள் 5பேரும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த பகுதிகள் குரங்குகள் அதிகமாக அட்டகாசம் செய்து வருதல் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் 73 வானூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வானூர் வட்டம் கிளியனூர் ஊராட்சியில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர் செயலியில் (BLO APP) உள்ளீடு செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வானூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர் ராஜூ, வானூர் வருவாய் வட்டாட்சியர் வித்யாதரன் உட்பட பலர் உள்ளனர்.

# ரிக் வேலைக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி கணவன் - மனைவி ரூ.50 லட்சம் மோசடி!

## நாமக்கல் போலீஸ் சூப்பிரண்டிடம் புகார்!!

நாமக்கல்,நவ. 14

ரிக் வண்டியில் பணி புரிய தேவையான ஆட்களை அனுப்புவதாக கூறி, 50, லட்சம் ரூபாய் முன் பணம் பெற்றுக் கொண்டு மோசடி செய்து கொலை மிரட்டல் விடுப்பதாக கூறி, தம்பதியர் மீது திருச்செங்கோடு ரிக் உரிமையாளர்கள் சங்கத்தினர், நாமக்கல் எஸ்.பி.,யிடம் புகார் மனு அளித்தனர்.



அந்த மனுவில் கூறியிருப்பதாவது: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டை சேர்ந்த கணவன், மனைவி இருவரும், தன்னிடம் ரிக் வண்டிக்கு தேவையான ஆட்கள் உள்ளனர்.

தேவைப்படும்போது ஆட்களை அனுப்புவதாக கூறி, ரிக் வண்டி உரிமையாளர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு, ஆட்களைஅனுப்புவதில்லை.

கொடுத்த பணத்தை திரும்ப கேட்டால், அலைக் கழிப்பு செய்து மன உளைச் சலுக்கு ஆளாக்குகின்றனர். தொடர்ந்து வற்புறுத்தினால், உன்னையும், உன் குடும்பத்தையும் கொலை செய்து விடுவேன் என, கொலை மிரட்டல் விடுக்கின்றனர். சங்கத்தின் லோகோவை தவறாக பயன்படுத்தி, ரிக் உரிமையாளர்களிடம் பணம் பறித் துள்ளனர். இவர்கள் மீது, கர்நாடகா, ஆந்திரா மாநிலங் களிலும் புகாரளித்துள்ளனர். எங்கள் தொழிலை பாது காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருச்செங்கோடு ரிக் உரிமையாளர்கள் சங்க தலைவர் சுரேஷ் கூறியதாவது:

நாங்கள், திருச்செங்கோட்டில் தொழில் செய்வதே கடினமான சூழ்நிலையாக உள்ளது. அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் பெற்றுத்தருகிறோம் எனக்கூறி, தம்பதியர் இருவரும், 50 லட்சம் ரூபாய் வரை மோசடி செய் துள்ளனர். இதனால், பல ரிக் உரிமை யாளர்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்கின்றனர்.

ஒவ்வொருவரும், நான்கு முதல், ஐந்து லட்சம் ரூபாய் முன்பணம் பெற்றுள்ளனர். வேலைக்கு ஆட்களை அனுப் புவதாக கூறி, பணம் பெற்று மோசடி செய்துள்ளனர் என்றார்.

## கோபி அருகே

# பேப்பர் லோடு ஏற்றி வந்த வேனில் திடீரென தீ விபத்து!



கோபி,நவ.14–

கோபி அருகே குஞ்சரமடை பகுதியில் இருந்து சத்தியமங்கலம் பகுதியில் உள்ள பேப்பர் மில்லிருக்கு சுமார் ஐந்து டன் பழைய நோட்டு புத்தகங்களை வேனில் ஏற்றிக்கொண்டு சென்று டிரைவர் சந்தோஷ் என்பவர் சென்று கொண்டிருந்தார். அப்போது, குள்ளம்பாளையம் பிரிவு அருகே வரும்போது வேனில் திடீரென புகை வந்துள்ளது, இதனைக் கண்ட டிரைவர் சந்தோஷ் வேனை சாலையோரம் நிறுத்திவிட்டு அங்கிருந்து இறங்கி சென்று அங்கிருந்து தப்பிஉள்ளர்

சிறிது நேரத்தில் எஞ்சின் பகுதியில் திடீரென தீப்பற்ற தொடங்கியுள்ளது, இதனைக் கண்ட சந்தோஷ் உடனடியாக கோபி தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார், இந்த நிலையில் வேனில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக என்ஜின் முன் பகுதி முற்றிலுமாக தியில் கருகி சேதமானது, மேலும் வேனின் பின் பகுதியில் இருந்து பழைய நோட்டு புத்தகங்களுக்கு தீ பரவியது

இது குறித்து தகவல் அறிந்த கோபி தீயணைப்புத் துறையினர் வேனில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்துனர்.

இதனால் கோபி சக்தி சாலையில் சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து ஒரு வழி பாதையில் மாற்றி விடப்பட்டது.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சியில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

# கள் விற்றவர் கைது!

பாலக்கோடு.நவ.14

தர்மபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி அருகே சட்ட விராதமாகபனங்கள்விற்பனைசெய்வதாகவந்தபுகாரின்பேரில், மாரண்டஅள்ளி போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சந்தன்கொட்டாய் பகுதியில் கள் இறக்கி விற்பனை செய்து கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்ததில் மாரண்டஅள்ளி ஈ.பி. காலணியை சேர்ந்த கிருஷ்ணன் (50), என்பதும் சட்டவிரோதமாக பனை மரத்தில் இருந்து கள் இறக்கி விற்பனை செய்து வந்ததும் தெரிய வந்தது, அவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து 1 லிட்டர் பனங்கள்ளை பறிமுதல் செய்தனர்.

## போச்சம்பள்ளி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில்

# "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம் நாளை நடக்கிறது!

## கலெக்டர் ச.தினேஷ் குமார் தகவல்!!

கிருஷ்ணகிரி,நவ.14



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வரும் 15.11.2025 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளது.

இம்மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு தேவையான இரத்த பரிசோதனை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை, XRay, ECG, ECHO, Ultra Sound, கண் பரிசோதனை மற்றும் மகப்பேறு மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், இம்முகாமிற்கு வரும் பொது மக்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக உடல் பரிசோதனைகள் மற்றும் இருதய பரிசோதனை செய்யப்படுகிறது.

இம்முகாமில் தொற்றா நோய், உயர் இரத்த அழுத்தம், கண் பார்வை பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இதய பரிசோதனை மற்றும் நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம், பெண்களுக்கான மார்பகபுற்றுநோய்பரிசோதனைமேலும் பல் சிகிச்சை உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதால் அனைத்து பொது மக்களும் கலந்துக்கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர். ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



திருச்செங்கோட்டில் ரூ.59.15 கோடியில் நடைபெறும் சாலைப்பணிகளை சேலம் தரக்கட்டுப்பாடு கோட்ட பொறியாளர் குமரேசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ஜி.கே.என்.எம். மருத்துவமனையில்

# புற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு கிளினிக் தொடக்கம்!

கோவை, நவ.14–

கோவையில் உள்ள ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் மேம்பட்ட புற்றுநோய்க்கான பிரத்யேக ஹைப்பர்தெர்மிக் இன்ட்ராபெரிட்டோனியல் கீமோதெரபி (எச்.ஐ.பி.இ.சி.) என்று அழைக்கப்படும் சிறப்பு கிளினிக் தொடங்கப்பட்டது. மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி கலந்து கொண்டு கிளினிக்கை தொடங்கி வைத்தார். எச்.ஐ.பி.இ.சி. என்பது கர்ப்பப்பை புற்றுநோய், குடல் கட்டிகள், பெருங்குடல் புற்றுநோய்கள், பெரிட்டோனியல்மீசோதெலியோமா, இரப்பை புற்றுநோய்கள் மற்றும் சில அறிய பெரிட்டோனியல் வீரியம் மிக்க கட்டிகள் போன்ற வயிற்றுப்பகுதியில் ஆழமாக பரவி உள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்டநபருக்குவழங்கப்படும்மிகவும் சிறப்பு வாய்ந்த சிகிச்சை முறை ஆகும்.

இந்த சிகிச்சையில் 2 முக்கிய அம்சங்கள் உள்ளன. புலப்படும் கட்டி படிவுகளை அகற்ற சைட்டோரிடக்டிவ் சர்ஜரி, அதை தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் வயிற்றுக்குள் கீமோதெரபி செய் யப்படுகிறது. இந்த சிகிச்சை




முறையில் நுண்ணிய புற்றுநோய் செல்கள் நேரடியாக அழிக்கப்படுகிறது.

இங்கு இதுவரை 25 எச்.ஐ.பி.சி.இ. சிகிச்சைகள் செய்யப்பட்டு உள்ளது. இந்த சிகிச்சைக்கான முன்னணி மையங்களில் ஜி.கே. என்.எம். மருத்துவமனை ஒன்றாக திகழ்வதாக மருத்துவமனை நிர்வாகிகள் தெரிவித்தனர். விழாவில் புற்றுநோயியல்துறைதலைவர்டாக்டர்பி.சிவநேசன், டாக்டர் பிரவீன் ரவிசங்கரன் மற்றும் அறுவை சிகிச்சை புற்றுநோயியல் ஆலோசகர் மற்றும் ரோபோடிக், எச்.ஐ.பி.இ.சி. அறுவை சிகிச்சைநிபுணர் பி.அருள்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், நேரலகிரி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# "அன்புச் சோலை" மையங்கள் மூலம் பயனடைந்த கோவை மாவட்ட பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நிறைந்த மனதுடன் நன்றியினை









சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிகாக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு



செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதிசெய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத்தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக கீரணத்தம் பிரபஞ்சம் அமைதி அறக்கட்டளை மற்றும், மேட்டுப்பாளையம், கோஆப்ரேட்டிவ் காலனி, விழுதுகள் அறக்கட்டளை ஆகிய 2 இடங்களில் "அன்புச் சோலை" மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீரணத்தம் அன்புச் சோலை மையத்தில் உள்ள சரவணம்பட்டி வி.எஸ் நகர் பகுதியை சேர்ந்த திருமதி. அனுராதா (வயது 61) தெரிவித்ததாவது,

என் பெயர் அனுராதா. நான் சரவணம்பட்டியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61 வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்கு சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் இன்று அன்புசோலையில் என்னை போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் பேசுவது மட்டுமல்லாமல் சிறு சிறு விளையாட்டுகளுடன் என்னுடைய பொழுதை கழித்த போது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன். நல்ல உணவினை காலையிலும் மதியத்திலும் வழங்கினார்கள். இதன் மூலம் என்னுடைய மனதிற்கும், உடலுக்கும் மிகவும் புத்துணர்ச்சியாக இருந்தது. இனி தினந்தோறும் இங்கு வருவேன். தனிமையில் இருக்கின்றோம் என்ற உணர்வே இருக்காது. என் போன்றவயதனவர்களின்நலனை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தந்த தமிழ்நாடு முதல



மைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீரணத்தம் அன்புச் சோலை மையத்தில் உள்ள சரவணம்பட்டி பகுதியை சேர்ந்த நாகராஜ் (வயது 61) தெரிவித்ததாவது,

என் பெயர் நாகராஜ். நான் சரவணம்பட்டி, ஐடி பெட்ரோல் பங்க் பகுதியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61 வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்கு சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் அன்புசோலையில் என்னை போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். தற்போது இந்த முகாமில் பல்வேறு பகுதியிலிருந்து வரும் முதியவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பதாலும் ஒத்த வயதிலும் இருப்பதாலும் மனம் விட்டு பேச முடிகிறது. அவர்களுடன் பேசியது மட்டுமல்லாமல் தினசரி நாளிதழ் வாசித்து, கேரம் விளையாடி என்னுடைய பொழுதை கழித்தபோது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன்.

என்போன்ற வயதனவர்களின் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

தொகுப்பு
ஆ.செந்தில் அண்ணா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இரா.சரண்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோயம்புத்தூர் மாவட்டம்.